**மே.மா/பிலி/தெஹிவெல தமிழ் மஹா வித்தியாலயம்**

# பாடசாலை அரங்கம் அமைத்தல்

## செயற்றிட்ட அறிக்கை

**திட்ட ஒருங்கிணைப்பாளர்:** திருமதி. கஜலட்சுமி ஸ்ரீஸ்கந்தராஜா, ஆசிரியை

**அறிமுகம்:**

மே.மா/பிலி/தெஹிவெல தமிழ் மஹா வித்தியாலயம் ஆனது கொழும்பு புறநகர் பகுதியில், பிலியந்தலை கல்வி வலயத்துக்குட்பட்டு அமைந்துள்ள 1C பாடசாலையாகும். இங்கே 285 பிள்ளைகள் கல்வி கற்கின்றார்கள். இவர்களில் பெரும்பான்மையானவர்கள் பின்தங்கிய குடும்பப் பின்னணியை உடையவர்கள். இவர்களின் தாய் அல்லது தந்தை , அல்லது இருவரும் கூலித் தொழிலையே பிரதான வருமானமாகக் கொண்டுள்ளனர். இவர்களது வீட்டுச் சூழலும் பிள்ளைகளின் கற்றற் செயற்பாடுகளுக்குப் பொருத்தமானதாக இல்லாமல் உள்ளதும், குறிப்பாகத் தாய் அல்லது இருவரும் தொழில் புரியும் குடும்பங்களில் பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்படுவதாலும், பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கை பாடசாலையிலேயே மிகவும் தங்கி உள்ளது. இது பாடசாலையின் பாட மற்றும் இணைப்ப பாட விதானச் செயற்பாடுகளை மேம்படுத்தவேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் பிள்ளைகளின், குறிப்பாக ஆரம்பப் பிரிவிலுள்ள பிள்ளைகளுக்குச் செயற்பாட்டு ரீதியான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளையும் ஊக்குவிக்க வேண்டிய நிலையையும் தோற்றுவித்துள்ளது. எனவே, பாடசாலைக்கு ஒரு அரங்கானது அமைப்பதென்பது அவசியமான செயற்பாடாக கருதப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

**திட்டத்தின் நோக்கங்கள்:**

இத் திட்டமானது பிரதானமாக பிள்ளைகளின் பாட மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை மேம்படுத்துவதாக நோக்கப்பட்டது

குறிப்பான நோக்கங்களாக பின்வருபவை இனங்காணப்பட்டன

- காலைக் கூட்டங்களை நடாத்துதல் அதில் பிள்ளைகளும் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல் – நற்சிந்தனை கூறுதல்
- இணைப்பாடவிதான செயற்பாடுகளான கலை நிகழ்வுகள், பேச்சுப்போட்டிகளை நிகழ்த்துவதற்கான சூழலை நிறுவுதல்
- நாடகம் மற்றும் அரங்கக் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை மேம்படுத்துதல்
- ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான செயற்பாடு ரீதியான கற்பித்தலை மேம்படுத்தல்
- பாட்சலைசார் பொது நிகழ்வுகளை நடாத்துவதற்கான சூழலை உருவாக்குதல்
- வகுப்பறை பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தல்

**திட்டப் பயனாளிகள்:**

பாடசாலையில் கல்வி பயிலுகின்ற, ஆரம்பப் பிரிவு தொடக்கம் உயர்தரம் வரையிலான அனைத்துப் பிள்ளைகளும் பிரதான பயனாளிகளாக உள்ளனர். அத்துடன் ஆசிரியர்களும், பெற்றோர்களும் இரண்டாம் பயனாளிகளாகின்றனர்.

**திட்ட நிறைவேற்ற முறை:**

அரங்கத்தின் தேவை உணரப்பட்ட போது, பாடசாலை ஆசிரியர்களுடன் இவ்விடயம் கலந்துரையாடப்பட்டது. எமது பாடசாலையின் வளாகத்தின் உள்ளே காணப்படும் சிறிய விளையாட்டு முற்றத்தில் பாடசாலையின் ஒரு கட்டடத்தின் ஓரமாக அமைப்பதென முடிவெடுக்கப்பட்டது. உதவி பெறக்கூடிய முறைகள் பற்றி ஆராயப்பட்டது. பாடசாலை அதிபரின் வழிகாட்டலில் திருமதி க. ஸ்ரீஸ்கந்தராஜா (ஆசிரியை) திட்ட ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டு இட் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மேலும் இது, பெற்றோர் ஆசிரியர் சந்திப்பின் போது, அரங்கமானது அமைக்கப்படவேண்டிய தேவையை உணர்த்தி, விடயம் தெளிவுபடுத்தப்பட்டது. பெற்றோர்களும் தமது ஒத்துழைப்பை வழங்க முன் வந்தனர். கட்டடம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளில் உதவுவதாகவும், தேவைப்படுமிடத்து பொருட்களை வழங்குவதாகவும் உறுதியளித்தனர். இதன்படி ஆசிரியர்களினூடான தொடர்புகள் மூலம் நலன் விரும்பிகளிடம் இருந்து பெறக்கூடிய உதவிகளும் இனங்காணப்பட்டு இதற்கான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. அதனடிப்படையில், கீழே தரப்பட்ட கால அட்டவணையின் பிரகாரம் கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்டு குறித்த காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டது.



**செயற்றிட்டக் காலம்:**

ஐந்து மாதங்கள் (நொவம்பர் 2018 – மார்ச் 2019)

| **திட்ட நடவடிக்கைகள்** | **காலம்** | | | | |
|---|---|---|---|---|---|
| | **நொவ 2018** | **டிசம்பர் 2018** | **ஜன 2019** | **பிப் 2019** | **மார்ச் 2019** |
| திட்டம் இனங்காணப் பட்டு செயற்றிட்டம் பற்றி ஆலோசிக்கப்பட்டது | | | | | |
| திட்டம் உருவாக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது | | | | | |
| பாடசாலை அபிவிருத்திக் குழுக் கூட்டம் (நிதி முகமை, உதவிபுரிவோர், கட்டிட வேலையாட்கள் ) | | | | | |
| வேலை ஆரம்பித்து நடைபெற்றது | | | | | |
| கண்காணிப்பு | | | | | |
| அரங்கத்தைப் பொறுப்பேற்று பாவனைக்கு உட்படுத்த தொடங்கியது | | | | | |

**நிதிப் பங்களிப்பும் வள முகாமைத்துவமும்:**

இத் திட்டத்துக்கான நிதியானது நான்கு மூலங்களில் இருந்து பெறப்பட்டது. பாடசாலை அபிவிருத்தி நிதியிலிருந்து ரூபா 100,000 பெறபட்டது. இதன் மூலமாக கட்டுமான வேலைகள் தொடங்கப்பட்டு அத்திவாரம் தொடக்கம் கூரை வரையிலான கட்டமைப்பு அமைக்கப்பட்டது. இவ்வரங்கத்தின் கூரையானது சண்.குகவரதன் (தொழிலதிபர்) அவர்களினால் செய்து கொடுக்கப்பட்டது. நிலம் மற்றும் மேடை அமைத்தது Crown Contractor இன் உதவிமூலமாக நிறைவேற்றப்பட்டது. வேலைகளின் நிறைவுப் பகுதியானது, வர்ணம் தீட்டல் உட்பட, UNHD எனும் நிறுவனத்தின் நிதி உதவியுடன் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது. அனைத்து வரவு செலவுச் செயற்பாடுகளும் கணக்குப் பதிவுகளும் பாடசாலை மற்றும் கல்வித் திணைக்களத்தின் நிதிப் பயன்பட்டு நியதிகளுக்கமைவாக நடைபெற்றன.

**திட்டத்தின் விளைவு:**



- பாடசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டி முதலாவதாக மார்ச் 2019 இல் இவ்வரங்கத்திலே நடாத்தப்பட்டது. இவ்வரங்கத்திலே பரிசளிப்பும் நடைபெற்றது.
- ஒவ்வொரு பாடசாலை நாட்களின் காலைப் பிரார்த்தனை மற்றும் காலைக் கூட்டங்கள் இவ்வரங்கத்திலே நிகழ்த்தப்படுகின்றது. மாணவர்கள் நற்சிந்தனைகளை கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது
- நாடக மற்றும் அரங்கக் கற்றல், கற்பித்தற் செயற்பாடுகள் இவ்வரங்கத்தைப் பயன்படுத்தி மேற்கொளப்படுகின்றது
- ஆரம்பப் பிரிவுப் பிள்ளைகளின் அழகியல் உணர்வுகளை ஊக்குவிக்கும் செயற்பாட்டு ரீதியான கற்றல், கற்பித்தல் இவ்வரங்கத்திலே நிகழ்த்தப்படுகின்றது.
- இவ்வரங்கம் வகுப்பறையாகவும் பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுகின்றது.

கஜலட்சுமி ஸ்ரீஸ்கந்தராஜா

இத் திட்டமானது எனது வழிகாடலின் கீழ் திருமதி. கஜலட்சுமி ஸ்ரீஸ்கந்தராஜாஅவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சோ. முரளி, அதிபர்.